**தலைப்பு 308 – தபால் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தபால் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தபால் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தபால் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 271/2019 இன் 3.5 ஆம் பிரிவின் பிரகாரம் சேமிப்புக்களுக்காக காரணம் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 101,420,388 தொகையான 3 செலவின விடயங்களின் சேமிப்புக்களுக்கான காரணம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த செலவின விடயங்களின் சேமிப்பு 17 சதவீதம் முதல் 45 சதவீதமான வரையிலான வீச்சில் காணப்பட்டது. | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பிரிவின் பிரகாரம் சேமிப்புக்களுக்குரிய காரணம் காண்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(VI) ஆம் பந்தியின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்த்து வைக்கப்பட வேண்டிய மீதி மற்றும் காசேட்டின் மீதியை இணக்கம் செய்வதற்காக தயாரிக்கப்பட்ட கட்டுநிதி சீராக்கல் கணக்கில் திறைசேரியிலிருந்து கிடைத்த முத்திரை வருமானமான ரூபா 2,646,539,778 பெறுமதி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு திறைசேரியிலிருந்து கிடைத்த முத்திரை வருமானம் கட்டுநிதி சீராக்கல் கணக்கில் குறைத்து காண்பிக்கப்பட வேண்டும். | ரூபா 2,646,539,778 தொகையான கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட வேண்டியதை ஏற்றுக் கொள்கின்றோம். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் திணைக்களத்தின் வருமானம் அல்லாத ஏனைய பெறுவனவுகள் ரூபா 5,905,655,779 ஆக இருந்த போதிலும், அந்த பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றிலும், காசுப்பாய்ச்சல் கூற்றிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 3,259,116,002 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் திணைக்களத்தின் ஏனைய பெறுவனவுகள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | 2019 இன் நிதிக் கூற்றுக்களில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் ஏனைய பெறுவனவுகளாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 3,259,116,002 பெறுமதி ரூபா 5,905,655,779 ஆக குறிப்பிடப்பட வேண்டிய கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றோம். |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் காசல்லாத சொத்துக்களின் மீதி திறைசேரி அச்சிடல் குறிப்புக்களுடன் ரூபா 2,643,420 இனால் இணங்கியிருக்கவில்லை. | காசல்லாத சொத்துக்களின் மீதி திணைக்கள புத்தகங்களின் பிரகாரமும் திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரமும் இணக்கம் செய்யப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். உரிய மாவட்ட அலுவலகங்களின் பிரகாரம் வேறுபாடுகள் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 5,749,524,631 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 8,396,064,408 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 2,646,539,777 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானம் அல்லாத பெறுவனவுகள் சரியாக கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். 2020 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக இந்த பெறுமதி கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படும். |

### 1.6.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனுராதபுரம் மற்றும் களுத்துரை என்ற 02 மாவட்ட அலுவலகங்களின் தனிப்பட்ட கடன் மீதிகளின் | தனிப்பட்ட கடன் மீதிக்கும் கட்டுப்பாட்டு கணக்கின் மீதிக்கும் இடையே சகல | உரிய வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்விற்கு |

| | | |
|---|---|---|
| கூட்டுத் தொகைக்கும் கட்டுப்பாட்டு கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 3,081,643 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | சந்தர்ப்பங்களிலும் வேறுபாடுகள் ஏற்படாதிருக்க வேண்டியதுடன் திணைக்களம் விசாரணைகளை பூர்த்தி செய்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். களுத்துறை மாவட்ட கணக்காளர் அலுவலகத்தில் ரூபா 1,295,400 தொகையான நிதி மோசடிக்கு உரிய திணைக்கள மட்டத்தில் உள்ளக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது. விசாரணைகள் முடிவடைந்ததன் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.6 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களின் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணி செல்வதை உறுதிப்படுத்த வேண்டியதை ஏற்றுக்கொள்கின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,956,427 தொகையான தீர்க்கப்படாத உப கட்டுநிதி மீதியில் ரூபா 1,218,530 தொகை 2020 பெப்ரவரி 28 ஆம் திகதியளவில் தீர்த்து வைக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டிலும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி தீர்க்கப்பட வேண்டியதுடன் கட்டுநிதிக் கணக்கிற்குரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கிறோம். 2020 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது, நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன் தீர்க்கப்பட்டிருந்த உப கட்டுநிதிகள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துவதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |

### 2.2 வருமான முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் இறுதி நிலுவை வருமான மீதி ரூபா 536,467,125 ஆக இருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப நிலுவை வருமான மீதி ரூபா 977,174,695 ஆனமையால் ரூபா 440,707,570 தொகையான வேறுபாடு 2018 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரித்ததன் பின்னர் இனங்காணப்பட்ட நிலுவை வருமான மீதியாக இருந்தது. | நிலுவை வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் திகதி அளவில் நிலுவை வருமான மீதி ரூபா 536,467,125 ஆக இருந்த போதிலும், சர்வதேச தபால்களுக்குரிய நிலுவை வருமானம் பொதுத் தபால் சங்கத்தின் பிரமாணங்களின் பிரகாரம் தேறிய கொடுப்பனவு அல்லது தேறிய வருமானம் இனங்காணப்படுகின்றது. அதன் பிரகாரம் அடுத்த ஆண்டில் புதிதாக இனங்காணப்படுகின்ற சர்வதேச தபால் வருமானம் பொதுத் தபால் சங்கத்தின் பிரமாணங்களுக்கு இணங்க சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 32 வருமான தொகுதிகளின் மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்யும் போது சாதகமான முரண்கள் ரூபா 2,165 முதல் ரூபா 186,829,804 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அது 1.42 சதவீதம் முதல் 98.96 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. 27 வருமான தொகுதிகளில் பாதகமான முரண்கள் ரூபா 7,988 முதல் ரூபா 65,917,309 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அது 4.5 சதவீதம் முதல் 96.6 சதவீதம் வரையிலாகும். | 2018 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 3 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 இன் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது கடந்த ஆண்டுகளின் வருமானம் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாகவும் கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

**2.3 செலவின முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மிகை நிதி ஏற்பாடு பெறப்பட்டமையின் காரணமாக 01 மீண்டெழும் செலவின விடயம் மற்றும் 01 மூலதன செலவின விடயம் என்பவற்றின் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னர் 13 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக கூட்டு மொத்தமாக ரூபா 9,194,797 தொகை சேமிக்கப்பட்டிருந்தது, | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். பெறுகை குறைபாடுகள் மற்றும் செலவின கட்டுப்பாடுகளினால் சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) பிரிவிற்கு முரணாக 2019 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு இன்றிய 07 செலவின தலைப்புக்களுக்காக உடன்பட்டிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 62,831,513 ஆகும். | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) இன் பிராகரம் பொறுப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தபால் திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக பேணப்பட வேண்டிய சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டில் ரூபா 62,831,713 தொகையான நிதி ஏற்பாட்டினை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை மற்றும் ஒவ்வொரு வருடமும் இந்த நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், எதிர்பாராத வகையில் எழுகின்ற நடவடிக்கையினால் இந்த நிலைமை உருவாகியிருந்தது. |

## 2.5 வங்கி கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத ரூபா 314,133 வரவு மீதி காணப்பட்டது. | இனங்காணப்படாத கொடுப்பனவுகளை இனங்காணுதல் வேண்டும். | இனங்காணப்படாத கொடுப்பனவுகள் தொடர்பாக கண்டறிவதற்காக 2020 யூன் 29 ஆம் திகதி மாவட்ட கணக்காளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெறப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஊழியர்களின் சம்பளம் மற்றும் மேலதிக நேர கிரயங்கள் உயர்வடைந்து சென்றமை, 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் நட்டம் ரூபா 138 மில்லியனால் அதிகரித்தமை என்பன காரணங்களாக இருந்த போதிலும், அதற்கு நேரொத்ததாக வருமானம் உயர்வடைந்து செல்வதற்கு தேவையான உபாய வழித்திட்டங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் செலவினங்களை மேவுகை செய்வதற்கும் வருமானங்களை உயர்வடையச் செய்வதற்கும் தேவையான உபாய வழிகள் இனங்காணப்பட வேண்டும். | திணைக்கள நட்டம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் ரூபா 137.74 மில்லியனால் அதிகரித்தமையை ஏற்றுக் கொள்கின்றோம். திணைக்கள செயற்பாட்டு நட்டத்தை குறைப்பதற்காக ஐந்து வருட திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் ஐந்து வருட காலத்தில் வருமான செலவினங்களை சமப்படுத்துவதற்கு அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாரஹேன்பிட்ட கணக்குகள் அலுவலகத்தில் முத்திரை பணியகத்தின் பௌதீக முத்திரை இருப்பு ரூபா 132,943,642 தொகை குறைவாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | முத்திரை இருப்பு கணக்குகளுடன் பௌதீக இருப்பு இனங்காமலுள்ள சந்தர்ப்பங்களின் போது அதற்கான காரணங்களை கண்டறிவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், ஒவ்வொரு வருடமும் திகெம்பர் 31 இல் உள்ளவாறு சரியான இருப்பு அறிக்கையிடப்பட வேண்டும். | ரூபா 132,943,642 தொகையான வேறுபாடுகள் தொடர்பாக கடந்த முத்திரை இருப்பு அறிக்கை மற்றும் திறைசேரி குறிப்புக்களுடன் பரீட்சிக்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டு முதல் இந்த முத்திரை இருப்பு கணக்கின் வேறுபாடொன்று காணப்படுகின்றமை மற்றும் நாரஹேன்பிட்ட முத்திரைப் பிரிவில் காணப்படுகின்ற முத்திரை பணியகத்திற்குரிய முத்திரை இருப்பு பௌதீக இருப்பு மீதியில் அறிக்கையிடப்பட்டிருக்கவில் லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) மெய்மெய்யாய்வு சபை அறிக்கைகளின் பிரகாரம் முத்திரைப் பிரிவின் கணக்காளர் பொறுப்பிலுள்ள ரூபா 2,526,800 தொகையான முத்திரை இருப்பு பற்றாக்குறை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 102 இன் பிரகாரம் முத்திரை பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தின் விசாரணைப் பிரிவினால் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் விசாரணைகள் முடிவடைந்த பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 24,251,407 தொகையான 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற கடன் மீதியை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழைய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன் மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும், அறவிட முடியாத கடன் மீதி தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அறவீடு செய்யாமைக்கான காரணங்களை காண்பித்து பதிவழிப்பதற்காக திறைசேரிக்கு அனுப்புவதற்கும் கோவைகளை சமர்ப்பிக்குமாறு சகல மாவட்ட கணக்காளர் அலுவலகங்களிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு பெறப்பட்ட கோவைகள் தற்போது பரீட்சிக்கப்படுகின்றது. |
| (ஆ) வருகை மற்றும் வெளிச் செல்கை அறிக்கை உரிய பிரகாரம் பேணிச் செல்லப்படாதிருந்த கல்கிஸ்ஸ தபால் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் 46 ஊழியர்களுக்காக மேலதிக நேரப்படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 5,171,110 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வருகை வெளிச் செல்கை முறையாக பேணப்பட்டு அதன் பிரகாரம் மேலதிக நேர கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களலுளும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன், தபால் திணைக்களத்தினால் இனங்காணப்பட்ட 17 நோக்கங்களின் தகவல்கள் 2017 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நோக்கங்களின் Bepost செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக முன்னுரிமை வழங்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், அந்த செயற்திட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதலை அளவீடு செய்வதற்காக சரியான தரவு முறையொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. அதனால் மீளாய்வாண்டில் அடையப்பட்ட இலக்குகளின் அளவு தொடர்பாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அளவீடு செய்வதற்கு தெளிவான தரவு முறையொன்று இனங்காணப்பட வேண்டும். | b-post ஈ - செயற்திட்டம் அமுல்படுத்துவதற்கான இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் நடுத்தர அளவிலான 200 தொழில் முயற்சியாளர்கள் மாத்திரம் பதிவு செய்திருந்தனர். மேலும் 2019 - 2023 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஐந்து வருட திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் மதிப்பீட்டில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 9 மில்லியன் நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்த போதும், அது கிடைக்கப் பெறாமையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்காகவும் இதற்காக நிதி ஏற்பாடு கோரப்பட்டுள்ளது. |

**5. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் 1,350 ஆக காணப்பட்ட வெற்றிடங்களுக்கு இடையே சிரேஷ்ட நிலையில் 58 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையில் 32 வெற்றிடங்களும் உள்ளடங்கியிருந்தன. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்வதற்கோ திணைக்களம் தவறியிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது ஊழியர்களின் எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தபால் திணைக்களத்தின் வெற்றிடங்களுக்காக அத்தியவசியமான ஆட்சேர்ப்புக்காக தற்போது ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |